# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 16 வியாழக்கிழமை 02.10.2025 கதிர் 327







## நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம்- கிழக்கில் கறுப்புப்பட்டியுடன் சிறுவர்கள் ஆதரவு!

கிழக்குமாகாணம், அம்பாறைமாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு சிறுவர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக கடந்த சனிக்கிழமை(27) நீதிக்கான சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நேற்று புதன்கிழமை (1) மாலை ஐந்தாவது நாளில் நிறைவுக்கு வந்தது.

இதன் போது நேற்றையதினம் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்ட சிறுவர்கள் தலையில் கறுப்புப் பட்டி அணிந்து தீபம் ஏற்றி எதிர்ப்பை வெளியிட்டு தமது ஆதரவை வழங்கினர்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தையின் முன்னால் ஒன்று கூடிய சிறுவர்கள், சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறு ஊர்வலத்துடன் தலையில் கறுப்புப் பட்டி அணிந்து கரிநாளாக அனுஷ்டித்து தீப்பந்தம் ஏந்தி எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த போராட்டத்தில் திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி செபஸ்தியான் தேவி, மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி அமல்ராஜ் அமலநாயகி, அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி, அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான தாமோதரம் பிரதீவன் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட உறவுகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# மஹிந்தவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவிலுக்கு விளக்கமறியல்




கொழும்பு, ஒக். 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரி நெவில் வன்னியாராச்சியை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் உத்தரவிட்டுள்ளது.

இன்று முற்பகல் கைது செய்யப்பட்ட நெவில் வன்னியாராச்சி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நெவில் வன்னியாராச்சி சட்டவிரோத சொத்துச் சேர்ப்பு தொடர்பான விசாரணை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாகிய போதே இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூன்று பிள்ளைகளின் தந்தை காட்டு யானை தாக்கி மரணம்



புத்தளம், ஒக். 02

காட்டு யானை தாக்கி மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இநதச் சம்பவம் புத்தளம், ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தில் 7➤

## இசைத்துறைத் தலைவர் ரெபேர்ட் புதிய பீடாதிபதியாகத் தெரிவு!



யாழ்ப்பாணம், ஒக். 02

சேர்பொன்னம்பலம்இராமநாதன் ஆற்றுகை மற்றும் காண்பியக் கலைகள் பீடத்தின் பீடாதிபதியாக இசைத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த.ரெபேர்ட் அருட்சேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் பீடாதிபதி எஸ். சிவரூபனின் பதவிக்காலம் நிறைவுக்கு வருவதைத் தொடர்ந்து, புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்கான பீடச் சபைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை 7➤

## மோ. சைக்கிள் விபத்தில் ஒருவர் பரிதாப மரணம்



சம்மாந்துறை, ஒக். 02

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் சிகிச்சை பலனின்றி ஒருவர் மரணமடைந்துள்ளார். மற்றைய இருவரும் கைது செய்யப்பட்டு 7➤

## 16 ஆம் நாளாகத் தொடரும் போராட்டம்



திருகோணமலை, ஒக். 02

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் 16 ஆம் நாளாக இன்றும் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக சத்யாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அபகரிக்கப்பட்ட விவசாய நிலங்களைப் பெற்றுத்தரக் கோரியே குறித்த விவசாயிகள் போராடி வருகின்றனர்.

பிரதமர் அலுவலகம் முன்பாகப் போராடியபோது பத்து நாள்களுக்குள் தீர்வு வழங்குவதாகக் கூறிய நிலையில் தற்போது பிரதமரின் பதிலுக்கு 7➤

# சுயாதீன சட்டத்தரணி அலுவலகம் நிறுவ தீர்மானம்– நிபுணர் குழு நியமனம்!

கொழும்பு, ஒக் .02

நாட்டில் நீதித்துறை செயல்முறையை வலுப்படுத்தும்பொருட்டு சுயாதீன சட்டத்தரணி அலுவலகம்நிறுவுவதற்கு அரசாங்கம்நிபுணர் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இது தொடர்பிலான கலந்துரையாடல் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில்நடைபெற்றதாகநீதிமற்றும்தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது சுயாதீன சட்டத்தரணி அலுவலகத்தை நிறுவுவதற்கான அடிப்படைத் திட்டங்களைத் தயாரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

அமைச்சு இது தொடர்பிலான அடிப்படைக் கருத்துப் பத்திரத்தைத் தயாரித்த பின்னர், பொதுமக்கள்மற்றும்சிவில்சமூக அமைப்புகளின் கருத்துக்களைப் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் உயர் நீதிமன்ற நீதிபதியும்ஜனாதிபதி சட்டத்தரணியுமான யசந்த கோதாகொட, சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பாரிந்த ரணசிங்க, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரான சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாசிக்குடாவில் தீப்பரவல்



பாசிக்குடா தனியார் சுற்றுலா விடுதி ஒன்றுக்கு அருகில் உள்ள தென்னந்தோட்டமொன்றில் தீ பரவிய சம்பவம் புதன்கிழமை (1) இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சுந்தரலிங்கம் சுதாகரனின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இவ்விடயத்தில் உடனடியாக செயற்பட்ட தவிசாளர் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேச சபையின் தண்ணீர் பவுசர்கள் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவை வரவழைத்து தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இருந்த போதும் இந்த தீ சம்பவத்தில் பல தென்னை மரங்கள் தீயில் கருகி சேதமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான தீப்பரவல் சம்பவங்கள் பலமுறை வாழைச்சேனை பகுதியில் இடம்பெற்றுள்ளதாகவும், தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மட்டக்களப்பு மாநகர சபையின் உதவியை நாடி வருவதாகவும் தவிசாளர் குறிப்பிட்டார்.

வாழைச்சேனை பிரதேசத்துக்கு தீயணைப்பு இந்திரம் மிக முக்கியமாக தேவைப்படுவதாகவும் அதனை பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# பொலிகண்டி பகுதியில் தீக்கிரையான படகு



வல்வெட்டித்துறை பொலிகண்டி ஆலடி பகுதியில் படகு மற்றும் கடல் தொழில் உபகரணங்கள் தீக்கிரையாகி உள்ளன குறித்த சம்பவம் புதன்கிழமை (அன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது

இச் சம்பவத்திற்கு காரணம் இது வரைக்கும் தெரியவில்லை இச் சம்பவம் தற்செயலாக ஏற்பட்டதா இல்லை யாரும் விஷமிகளால் ஏற்படுத்தப்பட்டதா என மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சம்பவத்தின் போது பல இலட்சம் பெறுமதியான படகு மற்றும் கடல் உபகரணங்கள் தீக்கிரையாகி உள்ளன என தெரிய வருகிறது. (ஐ)



# மகாத்மா காந்தியின் 156 வது பிறந்த நாள்





கொழும்பு, ஒக் .02

மகாத்மா காந்தியின் 156 வது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் வியாழக்கிழமை (02) காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதர் சாய் முரளி , வடமாகாண பிரதம செயலாளர் மு.தனுஜா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ் மாநகர பிரதி முதல்வர் இ.தயாளன்,யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணசந்திரன் மற்றும் சமய சமூக பிரதிநிதிகள்,இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதி அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

இதே வேளை இந்திய துணைத்தூதரக அதிகாரிகளால்

# இலங்கையர்களில் மதுவால் தினமும் 50 பேர் அகால மரணம்



கொழும்பு, ஒக் .02

'எதிர்வரும் 2026ஆம் ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் மதுசாரத்திற்கான வரியை சரியான முறையில் அதிகரித்து எதிர்கால சந்ததியினர் மது பாவனைக்கு ஆளாகும் சதவீதத்தை குறைப்பதற்கும், மது பாவனையினால் ஏற்படுகின்ற சுகாதார மற்றும் பொருளாதார பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் அரசாங்கத்தின் விரைவான திட்டமொன்று தேவை' என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது,

வருடாந்தம் மது பாவனையினால் சுமார் 03 மில்லியன் பேர் அகால மரணமடைகின்றனர். உலகளாவிய ரீதியில் ஏற்படுகின்ற தடுக்கக்கூடிய 10 மரணங்களுள் 08 மரணங்கள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. மேலும் தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான நான்கு பிரதான காரணங்களில் மது பாவனை முன்னனி காரணியாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் ஏற்படும் மரணங்களில் 83 சதவீதமான மரணங்கள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன, மது பாவனையினால் தினமும் சுமார் 50 இலங்கையர்கள் அகால மரணமடைகிறார்கள், மேலும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20,000 இலங்கையர்கள் அகால மரணமடைகிறார்கள். இருதய நோய் மற்றும் புற்றுநோய் போன்ற நோய்களுக்கு மதுசார பாவனை ஒரு முக்கிய காரணியாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# விஜேராம இல்லம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை



கொழும்பு, ஒக் .02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை இன்னும் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கவில்லை என்று அரசாங்கப் ஊடகப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குப் பேசிய அமைச்சர் ஜெயதிஸ்ஸ, மஹிந்த வளாகத்தை விட்டு வெளியேறி மூன்று வாரங்கள் ஆகின்றன என்றார்.

இந்த விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சகம் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ விரைவில் ஒரு புதிய வீட்டைக் கண்டுபிடித்து கொழும்புக்குத் திரும்பக்கூடும் என்று அமைச்சர் ஜெயதிஸ்ஸ மேலும் கூறினார்.

ஜனாதிபதியின் உரிமைகள் (ரத்துசெய்தல்) சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை காலி செய்துவிட்டு தங்காலைக்குத் திரும்பினார்.

முன்னாள் ஜனாதிபதிகள், அவர்களது விதவைகள் மற்றும் ஓய்வு பெற்ற எம்.பி.க்களுக்கு வழங்கப்படும் சிறப்பு சலுகைகளை ரத்து செய்யும் சட்டமூலம், செப்டம்பர் மாதம் பாராளுமன்றத்தில் எந்த திருத்தங்களும் இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. (ஐ)

# காணிகளை மக்களுக்காக விடுவிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்! சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்கவின் அறிவிப்பு




கொழும்பு, ஒக் .02

வன்னி மாவட்டத்திலே 101,762.75 ஏக்கர் (ஒரு இலட்சத்து ஆயிரத்து எழுநூற்று அறுபத்திரண்டு புள்ளி எழுபத்தைந்து ஏக்கர்) நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம் என சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்தார்.

வவுனியா மதுரா நகர் பகுதியிலே தாவரவியல் பூங்கா மற்றும் வன்னிவிளாங்குளம் பகுதியில் எக்கோ பூங்கா என்பவற்றை அமைப்பது தொடர்பாக சம்மந்தப்பட்ட திணைக்களங்களுடன் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சுற்றுச்சூழல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தலைமையில் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கூட்டத்தின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்

எங்களுடைய அரசாங்கம் கடந்த ஜூலை மாதம், வன பாதுகாப்பு இடங்களாக கிட்டத்தட்ட 30 இடங்களை அடையாளம் கண்டு அதனை பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள இருந்தது.

இந்நிலையில் கடந்த கால அரசாங்கங்கள் ஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலமாக வடக்கு கிழக்கு பகுதிகளிலே அளவீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு அளவீடு மேற்கொள்ளும் போது மீள்குடியேறிய மக்களின்வாழ்விடங்கள், விவசாய நிலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரச நிலங்கள் என்பனவும் வன பிரதேசங்களிற்கு உள்வாங்கும் நிலை ஏற்பட்டது.

இதன் காரணமாக இங்கே பாரிய ஒரு காணி பிரச்சனை காணப்பட்டது. இதன் காரணமாக குறித்த திட்டத்தை இங்கே நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது.

நாம் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையிலே இதற்கான உரிய தீர்மானங்களை மேற்கொண்டு வன்னி நிலப்பரப்பிலே 101,762.75 (ஒரு இலட்சத்து ஆயிரத்து எழுநூற்று அறுபத்திரண்டு புள்ளி எழுபத்தைந்து ஏக்கர்) நிலங்களை மக்களுக்காக விடுவிக்க இருக்கின்றோம்.

அதிலே வவுனியா மாவட்டத்திற்கு 22,804.40 ஏக்கர் (இருபத்தி இரண்டாயிரத்து எண்ணூற்று நான்கு புள்ளி நாற்பது ஏக்கர்) நிலமும் மன்னார் மாவட்டத்தில் 178,82.8 ஏக்கர் (பதினேழாயிரத்து எண்ணூற்று எண்பத்தி இரண்டே புள்ளி எட்டு ஏக்கர்) நிலமும் முல்லைத்தீவு மாவட்டத்திலே 48,532.6 ( நாற்பத்தெட்டாயிரத்து ஐநூற்று முப்பத்தி இரண்டு புள்ளி ஆறு ஏக்கர்) ஏக்கர் நிலங்களையும் விடுவிக்கப்பட இருக்கின்றது.

ஆனால் இவ்வாறு நிலங்கள் விடுவிக்கப்பட்டாலும் பிரச்சனைகள் மேலும் இருக்கின்றது என்பதை நாங்கள் தற்கால மேற்பார்வைகளின் மூலம் இனம் கண்டிருக்கின்றோம்.

எனவே அதனையும் தீர்க்கும் முகமாக அமைச்சரவை மட்டத்திலே கடந்த ஆகஸ்ட் மாதம் 25ஆம் தேதி ஒரு அமைச்சரவை தீர்மானத்தை எடுத்திருந்தோம்.

அந்த அமைச்சரவை தீர்மானத்தின் படி, வன வள திணைக்களத்தின் எல்லைப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த காணிகளை விடுவிப்பதற்காக அனைத்து திணைக்களங்களும் உள்ளடங்களாக ஒரு விசேடமான குழுவினை நாங்கள் நியமித்திருக்கின்றோம்.

வனவளதிணைக்களத்தினால் கையப்படுத்தப்பட்ட காணிகளை நிச்சயமாக மக்களுக்காக விடுவிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையிலே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை விரைவுபடுத்துவோம் என தெரிவித்துள்ளார். (ஐ)

# பாமக மாநில இளைஞரணி தலைவராக தமிழ்க்குமரன் நியமனம்- ராமதாஸ் அறிவிப்பு




பாமக மாநில இளைஞரணி தலைவராக தமிழ்க்குமரன் நியமனம் செய்து ராமதாஸ் அறிவித்துள்ளார். ஜி.கே. மணியின் மகன் தமிழ்குமரனுக்கு பாமக மாநில இளைஞரணி தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அன்புமணி - ராமதாஸ் மோதல் நடந்துவரும் நிலையில் மீண்டும் தமிழ்க்குமரன் நியமனம். தமிழ்க்குமரனிடம் நியமன உத்தரவை ராமதாஸின் மூத்த மகள் ஸ்ரீகாந்தி வழங்கினார்

பாமக இளைஞரணித் தலைவர் பதவி என்பது அன்புமணி ராமதாஸ் வகித்த பதவி என்பதால் அதனை பெறுவதற்கு பலரும் முயற்சித்த நிலையில் கடைசியில் ஜி.கே. மணியின் கை ஓங்கியுள்ளது. பாமக இளைஞரணித் தலைவராக இருந்த அன்புமணி ராமதாஸ் சில மாதங்களுக்கு முன்னர் கட்சியின் தலைவராக புரோமோஷன் பெற்றார்.

இந்நிலையில் அன்புமணிக்காக பாமகவில் தலைவர் பதவியை ராஜினாமா செய்து வழிவிட்டு ஒதுங்கிக் கொண்ட ஜி.கே.மணி தனது மகன் தமிழ் குமரனை பாமக இளைஞரணித் தலைவராக்க விரும்பினார். இறுதியில் வெற்றியும் பெற்றுவிட்டார். பாமக இளைஞரணித் தலைவராக ஜி.கே.மணியின் மகன் ஜி.கே.எம்.தமிழ் குமரனை நியமித்த ராமதாஸ் அதற்கான நியமன கடிதத்தை வழங்கினார்.

அன்புமணிக்கு பிறகு பாமக இளைஞரணி தலைவராக நியமிக்கப்பட்ட தமிழ்க்குமரன் 2022-ல் பதவி விலகினார். அன்புமணியின் எதிர்ப்பு காரணமாக தமிழ்க்குமரன் பதவி விலகியதாக அப்போது தகவல் வெளியானது. தமிழ்க்குமரனுக்குப் பிறகு இளைஞரணி தலைவராக முகுந்தன் நியமிக்கப்பட்டதற்கு அன்புமணி எதிர்ப்பு தெரிவித்தார். எனது 3வது பேரன் முகுந்தன் நியமிக்கப்பட்டபோது என் மீது மைக் பாய்ந்தது. தனது சொந்த சகோதரி மகன் முகுந்தனை அன்புமணி ஏற்கவில்லை. (ஐ)

## இந்தியாவில் உள்ள பெருங்கோடீஸ்வரர்கள் பட்டியலில் இடம்பிடித்தார் நடிகர் ஷாருக்கான்!



இந்தியாவில் உள்ள பெருங்கோடீஸ்வரர்கள் பட்டியலில் நடிகர் ஷாருக்கான் இடம்பிடித்தார். 2025ம் ஆண்டு இந்தியாவின் பெருங்கோடீஸ்வரர்கள் பட்டியலை ஹுரன் அமைப்பு வெளியிட்டுள்ளது. ரூ.12,490 கோடி சொத்து மதிப்புடன் பெருங்கோடீஸ்வரர்கள் பட்டியலில் நடிகர் ஷாருக்கான் இடம்பிடித்தார். ரூ.21,190 கோடி சொத்து மதிப்புடன் சென்னை இளைஞர் அரவிந்த் ஸ்ரீனிவாஸ் பட்டியலில் இடம்பிடித்தார். பெருங்கோடீஸ்வரர்கள் பட்டியலில் ரூ.9.55 லட்சம் கோடியுடன் முகேஷ் அம்பானி முதலிடத்தில் உள்ளார். ரூ.8.15 லட்சம் கோடியுடன் அதானி குழுமத்தின் கவுதம் அதானி 2வது இடத்தில் உள்ளார். (ஐ)

## காவல்துறை முதல்வர் ஸ்டாலினின் கட்டுப்பாட்டில் இல்லை: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள காந்தி சிலைக்கு தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் மரியாதை செலுத்தினார். பின்னர், நிருபர்களிடம் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: கரூரில் இன்றைக்கு 41 பேர் பரிதாபமாக இறந்து போய் உள்ளனர். யார் மின்தடை ஏற்படுத்தினார்கள். யார் செருப்பை தூக்கி வீசினார்கள். போலீசார் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்?

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே 30 ஆம்புலன்ஸ் வருவதற்கு காரணம் என்ன? முதல்வர் வந்தால், நல்ல இடத்தில் அனுமதி கொடுக்கிறார்கள். இவர்களுக்கு மட்டும் ஏன் அந்த இடத்தில் அனுமதி கொடுத்தார்கள். இதை எல்லாம் அவர்கள் சீர் தூக்கி பார்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நயினார் நாகேந்திரன் பதில்: விஜய் தன்னை பாஜவின் எதிரி என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போது அவர் எங்கள் பிடியில் இருப்பதாக சொல்வது சரியில்லை.

கரூர் சம்பவம் குறித்து முதல்வர் ஸ்டாலினுக்கு நயினார் நாகேந்திரன் 12 கேள்விகள்!

நிருபர்: பாஜ குழு கரூரில் ஆய்வு செய்து விட்டு சென்று உள்ளார்கள். அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?

நயினார் நாகேந்திரன் பதில்: அந்த குழு அறிக்கையாக ஆய்வு செய்ததை எழுதி கொடுத்து இருக்கிறார்கள். என்ன முடிவு செய்தார்கள் என்பதை பொறுத்து அதனை சொல்ல முடியும்.

நிருபர்: திருவண்ணாமலையில் போலீசாரே பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்?

நயினார் நாகேந்திரன் பதில்: இது ஏதோ இன்றைக்கு, நேற்று நடக்கும் சம்பவம் அல்ல. திமுக ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து வேலியே பயிரை மேய்ந்தார் போல, காவல்துறையில் இதுபோன்றவர்கள் தமிழகத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள்.

இன்னும் அவர்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல்துறை முதல்வர் ஸ்டாலினின் கட்டுப்பாட்டில் இல்லை என்பது நிரூபணம் ஆகி உள்ளது. (ஐ)

## கடலில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 3 லட்சம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெம்மேலி கிராமம், சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கினார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், நெம்மேலி கிராமம், சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடந்த 28.9.2025 அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் சென்னை, பெரம்பூர் அகரம் பகுதியிலிருந்து மகேந்திரா வேன் மூலம் சுற்றுலா வந்த 17 நபர்களில் பெரம்பூர், சக்கரபாணி தோட்டத்தைச் சேர்ந்த வெங்கடேசன் தஃபெ.சந்திரன் என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

மேலும், அவரது இரண்டு மகள்கள் கார்த்திகா (வயது 17) மற்றும் துளசி (வயது 16) ஆகிய இருவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டு 30.9.2025 அன்று மேற்படி இருவரின் உடல்கள் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமானச் செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இம்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். (ஐ)

## தமிழக அரசுக்கு என்ன தயக்கம், என்ன அச்சம்? கேள்விகளை அடுக்கிய திருமா!



கரூர் சம்பவத்தில் தவெக தலைவர் விஜய் மீது வழக்கு தொடுப்பதற்கு தமிழக அரசுக்கு என்ன தயக்கம், என்ன அச்சம்? என விடுதலை சிறுத்தைக் கட்சி தலைவர் திருமாவளவன் கேள்வி எழுப்பி உள்ளார்.


திருச்சியில் நிருபர்களிடம் திருமாவளவன் கூறியதாவது: கரூர் சம்பவத்தில் தமிழக போலீசார் காட்டும் மெத்தனம் அதிர்ச்சி அளிக்கிறது. இதில் ஏன் விஜய் மீது வழக்குப்பதிவு செய்யவில்லை. ஆனந்த் மீது வழக்குப்பதிவு செய்ய என்ன முகாந்திரம் இருக்கிறது. அந்த முகாந்திரம் விஜய்க்கு இல்லையா? ஆதவ் அர்ஜ/னா மீது ஏன் இதுவரை வழக்குப் பதிவு செய்யவில்லை? தமிழக அரசு அச்சப்படுகிறதா?

தமிழக காவல்துறை அச்சப்படுகிறதா? அல்லது வலுத்தவர்கள் மீது வழக்குப்பதிவு போடுவதில்லை, இளைத்தவர்கள் மீது தான் வழக்குப்பதிவு போடுவது என்கிற நடைமுறையை கையாள்கிறதா? 15, 20 வருடங்களுக்கு முன், நான் நயினார்பாளையம் என்ற இடத்தில் நான் பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டு இருக்கிறேன். புதுச்சேரி அருகில் ஒரு சம்பவம் நடக்கிறது அன்றைக்கு விழுப்புரம் எஸ்பியாக இருந்த ரவி என் மீது வழக்கு போட்டார்.

எனக்கும், அதற்கும் சம்பந்தம் இல்லை. எனக்கு தெரியாத ஒரு நிகழ்வு. கட்சிக்காரர்கள் ஏதோ ஒரு சம்பவத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற உடன் சம்மந்தமே இல்லாத என் மீது பல வழக்குகளை எந்த தொடர்பும் இல்லாத நிலையில் போடப்பட்டு இருக்கிறது. காவல்துறையின் இந்த அணுகுமுறை ஏற்புடையது அல்ல. எதற்காக அச்சப்படுகிறார்கள்? யாருக்காக அச்சப்படுகிறார்கள்.

எல்லோரும் சமம் என்று பார்க்கிற போது அந்த கட்சியில் சம்மந்தப்பட்டவர்கள், காரணமானவர்கள், அலட்சியமாக இருந்தவர்கள், இந்த உயிரிழப்பிற்கு காரணமான நிலைப்பாட்டை எடுத்தவர்கள், கால தாமதம் செய்தவர்கள் என்கிற வரிசையில் நடிகர் விஜயும் தானே வருகிறார். அவர் மீது வழக்கு தொடுப்பதற்கு தமிழக அரசுக்கு என்ன தயக்கம், என்ன அச்சம், இந்த அணுகுமுறை ஏற்புடையது அல்ல. இவ்வாறு திருமாவளவன் கூறினார்.(ஐ)

# சொர்க்கத்தின் திறவுகோல் யாரிடம்?





சொர்க்கம் இருக்கிறதா? இல்லையா? என்ற கேள்விக்கு ஒரு தர்க்கரீதியான பதில் கிடைத்துவிடும் ஆனால், சொர்க்கம் எப்படியிருக்கும் என்ற கேள்விக்குப் பதிலளிப்பது சமயதிற்குச் சமயம் வேறுபடுவதோடு, இது ஒருவரது சமய நம்பிக்கைகளோடு தொடர்புடையதால் பெரும்பாலும் இத்தகைய கேள்விகள் கேட்பதைப் பற்றுறுதியாளர்களும், சமயத் தலைவர்களும் ஊக்கப்படுத்துவதில்லை.

மேலும், இறந்த பிறகு யாரும் உயிரோடு வந்து நமக்குத் தெரிந்த பொது வரலாற்றில் அறிவுப்பூர்வமாக சொர்க்கம் பற்றி விவரித்ததில்லை. சொர்க்கம் இருக்கிறது எனும் பட்சத்தில், யார் அதை அடையத் தகுதிப் பெற்றவர்கள் என்பதை நிர்ணயிக்கும் உரிமை யாருக்கிருக்கிறது என்ற வினாவை பெண்ணியவாதிகள், முற்போக்குச் சிந்தனையாளர்களும் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கிறார்கள். சொர்க்கம் குறித்த பாலினப் பார்வையை எப்படி இருக்கிறது என்ற கோள்விக்கான விடையைத் தேடும் முயற்சியின் வெளிப்பாடே இந்தக் கட்டுரை.

இந்த வருடத்திற்கான உலக புக்கர் விருதினைப் உநயசவ டுயஅி என்கிற பானு முஷ்டாக்கின் சிறுகதைத்தொகுப்பு பெற்றது. கன்னடத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மொழ்பெயர்க்கப்பட்ட கதைத்தொகுப்பின் முதல் கதையே ஏன் இந்த உயரிய விருதை இந்நூல் பெற்றுள்ளது என்பதை நியாயப்படுத்தியது.

இவர் முஸ்லிம் பெண்கள் பள்ளிவாசலில் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்காக போராடியதால் மூன்று மாத சமூக விலக்கை தண்டனையாகப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. முதல் கதையில் தனது கணவரை மிகவும் சுவாரஸ்யமாக அறிமுகம் செய்கிறார். தன் கணவரை 'பதி' என்று அழைப்பதா?



அல்லது வழக்கமாக 'தேவரு' என்ற சொல்லையும் இணைப்பதா? என்று கேட்டுவிட்டு, எவ்வாறு பெண்கள் எந்த சமயத்தைச்சேர்ந்தவராகயிருந்தாலும், ஆண்களுக்கு அடிமைகளாக இருப்பதை வலியுறுத்துகிறார்கள் என்றுக் குறிப்பிடுகிறார்.

இஸ்லாம் சமயத்தைப் பொறுத்தவரை ஆன்மிக அளவில் ஆண்களும், பெண்களும் சமம். ஆனால், யதார்த்தில் பெரும்பாலும் கணவரின் தேவைகளையும் பூர்த்து செய்வது நல்ல பெண்களில் குணங்களாக கருதப்படுவதோடு சொர்க்கம் செல்லுவதற்கான தகுதியாகவும் படிப்பிக்கப்படும்போது பாலின சமத்துவம் அடிவாங்குகிறது. திருக்குர்ஆனில் இந்தக் கருத்து இடம்பெறவில்லை என்றபோதும், பரவலாக இரத்தசாட்சியாக இறக்கும் நபர்களுக்கு (ஆண்கள் மட்டும்) சொர்க்கத்தில் 72 கன்னிப்பெண்கள் வழங்கப்படுவார்கள் என்ற பாரம்பரியம் அவ்வாறு இரத்தசாட்சிகளாக மரிப்பதை உயர்த்திப்பிடிக்கிறது. பல நேரங்களில் சமயத்தில் சொல்லப்படுவதறகும், நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கும் பெருத்த வேறுபாடுகள் உள்ளன.

இந்து சமயத்தின் வைதீக மெய்யியலை அடிப்படையாக, அதாவது வேதங்களை அடித்தளமாக கொண்ட கருத்தியல்கள் பெண்களை சொர்க்கம் சென்றாலும் கணவனுக்குப் பணிவிடை செய்வதற்காக மட்டுமே அனுமதிக்கப்படுவதாக விளக்குகிறது.



கிறிஸ்தவ சமயத்தில் ஆன்மா உண்டென்ற நம்பிக்கை இருப்பதோடு ஆன்மாவிற்குப் பாலின வேறுபாடு கிடையாது என்கிற நம்பிக்கை இருப்பதால், ஓரளவிற்கு சமத்துவம் சுவர்க்கத்தில் இருப்பதாகக் கொள்ளலாம். ஆனால், அங்குப்போய்ச்சேருவதற்குத் தேவையான பண்புகள் பல. அவைகளில் ஒன்று கணவருக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பது திருமண ஒப்பந்தத்தில் ஏறெடுக்கப்படும் முக்கியமான கூறுபாடு. எதுவாயினும் இயேசு கிறிஸ்து இன்னொரு உலகைப்பற்றிக் கூறவில்லை, இவ்வுலகில் கடவளுடைய அரசு வருக என்று வேண்டிக்கொள்ளக் கற்றுத்தந்தார் என்று விவாதிப்போரும் உண்டு. இவ்வாறு இவ்வுலகில் சமத்துவம், இல்லை. சொர்க்கம் என்பது நிஜமோ, புனைவோ, இறந்த பிறகாவது நிம்மதியாக இருக்க பெண்களுக்கு உரிமை இருக்கும் என்று இடமில்லை. அட, இந்த உலக வாழ்க்கையில் பெண்களின் உழைப்பைச் சுரண்டி அடிமையாக வைத்திருப்பதற்காக சொர்க்கம் என்ற ஒன்று கண்டுப்படிக்கப்பட்டதோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

# அதிபர் டிரம்ப் போட்ட கையெழுத்தால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டம்..? மத்திய கிழக்கில் மாறும் போர் சூழல்



அமெரிக்க அதிபர் டிரம்ப் போட்ட கையெழுத்தால் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதனால் மத்திய கிழக்கில் போர் சூழல் மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலும், பாலஸ்தீனம் இடையே 2 ஆண்டுகளாக போர் நீடித்து வருகிறது. பாலஸ்தீனத்தின் காசா நகரில் இஸ்ரேல் படைகள் நுழைந்து அதிரடி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த போரை நிறுத்த அமெரிக்க அதிபர் டிரம்ப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். தற்போது போர் நிறுத்தம் தொடர்பான அமெரிக்கா தயாரித்துள்ள ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் சம்மதம் தெரிவித்துள்ளது. ஆனால் ஹமாஸ் அமைப்பு ஒப்பு கொள்ளவில்லை.

ஹமாஸ் அமைப்புக்கு 3 நாள் காலக்கெடுவை டிரம்ப் விதித்துள்ளார். இது ஒருபுறம் இருக்க, கடந்த மாதம் 9ம் தேதி நள்ளிரவில் திடீரென கத்தார் தலைநகர் தோஹாவில் ஹமாஸ் அமைப்பை சேர்ந்த கலில் அல் ஹயா என்பவர் பதுங்கியுள்ளதாக கருதி, இஸ்ரேல், தனது போர் விமானங்கள் மூலமாக தாக்குதல் நடத்தியது. இதில் கலில் அல் ஹயா தப்பினார். ஆனால் அவரது மகன் ஹமாம் அல் ஹயா, அவரது அலுவலக இயக்குனர் ஜிகாத் லுபத், 3 பாதுகாவலர்கள், ஒரு கத்தார் பாதுகாப்பு அதிகாரி உள்பட 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்தது.

அமெரிக்காவுக்கு, கத்தார் - இஸ்ரேல் நல்ல நட்பு நாடுகள். தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அதை முறியடிக்க அமெரிக்கா உதவும் என்ற நம்பிக்கை கத்தாருக்கு உள்ளது. அதுமட்டுமின்றி அமெரிக்காவின் விமானப்படை கத்தாரில்தான் உள்ளது. இப்படியான சூழலில் கத்தார் மீதான இஸ்ரேலின் தாக்குதலை டிரம்ப் ஏற்கவில்லை. இது தொடர்பாக கத்தார் அமெரிக்கா மீது அதிருப்தியை வெளிப்படுத்தியது. இஸ்ரேல் தாக்குதல் பற்றி அமெரிக்கா அறிந்திருந்தும் தங்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கவில்லை என்று அதிருப்தியை வெளிப்படுத்தியது.

இதனால் கோபத்தின் உச்சிக்கு சென்ற டிரம்ப், இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவுக்கு தொலைபேசியில் தொடர்ந்து கடிந்து கொண்டார். அதுமட்டுமின்றி சில நாட்களுக்கு முன்பு அமெரிக்கா சென்ற இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் கத்தார் தலைநகர் தோஹா மீதான தாக்குதலை டிரம்ப் கண்டித்தார். மேலும் கத்தார் பிரதமரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அழுத்தம் கொடுத்தார். இதையடுத்து வேறு வழியின்றி டிரம்ப் உடனான சந்திப்பிலேயே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, வெள்ளை மாளிகையில் இருந்து தொலைபேசியில் கத்தார் பிரதமர் செய்க் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல்-தானியை தொடர்பு கொண்டு, தாக்குதலுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கோரினார். மேலும் கத்தார் மீது தாக்குதலை நடத்தமாட்டேன் எனவும் நெதன்யாகுவை சொல்ல வைத்தார் டிரம்ப். இந்த சம்பவம் தற்போது, நெதன்யாகுவிற்கு மான பிரச்னையாக மாறியுள்ளது. இதனால் அமெரிக்கா மீது இஸ்ரேல் அதிருப்தியில் இருப்பதாக கூறப்படுகிறது.

இப்படிப்பட்ட சூழலில்தான் கத்தார் நலன் சார்ந்த ஒரு உத்தரவில் கடந்த 28ம் தேதி டிரம்ப் போட்ட ஒரு கையெழுத்து மிகவும் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. அதாவது, கத்தாரில் அமெரிக்காவின் விமான படை தளம் உள்ளது. இதனால் இந்த கையெழுத்தை டிரம்ப் போட்டார். அந்த உத்தரவில், கத்தாரின் பாதுகாப்பை உறுதி செய்ய அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது. இதனால் கத்தாரை குறிவைத்து எந்த நாடு தாக்கினாலும் அதன் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் கத்தார் மீதான தாக்குதலை அமெரிக்கா, தனது நாட்டின் மீதான தாக்குதலாக கருதி ராணுவ நடவடிக்கையை தொடங்கும் என்பதுதான் இந்த உத்தரவின் முக்கிய சாராம்சம்.

இதுதான் தற்போது இஸ்ரேலுக்கு பிரச்சனையாக மாறி உள்ளது. ஏனென்றால் கத்தாரை, இஸ்ரேல் எப்போதுமே ஆபத்தான நாடாகத்தான் பார்க்கிறது. இஸ்ரேலுக்கு எதிராக செயல்படும் ஹமாஸ் அமைப்புகளை சேர்ந்த முக்கிய தலைவர்கள் அவ்வப்போது கத்தாரில்தான் பதுங்கி வருகின்றனர். இஸ்ரேலுக்கு எதிரான செயல்பாடுகளை அங்கு வைத்து திட்டமிட்டுதான் சதிவேலைகளை அரங்கேற்றுவதாக நெதன்யாகு கூறி வருகிறார். இப்படியான சூழலில்தான் கத்தார் மீண்டும் ஹமாஸ் அமைப்பினருக்கு அடைக்கலம் கொடுக்கலாம். இதனால் இஸ்ரேலும், கத்தாரை தாக்கவும் செய்யலாம். இது நடக்கும் பட்சத்தில் கத்தாருக்கு ஆதரவாக இஸ்ரேலை, அமெரிக்கா தாக்கும் வகையில் இந்த உத்தரவு உள்ளது.

இருப்பினும் இஸ்ரேலை அவ்வளவு எளிதாக அமெரிக்கா சீண்டாது. தற்போதைய கையெழுத்து என்பது கத்தாரை சமாதானப்படுத்தும் வகையில் டிரம்ப் போட்டிருக்கலாம். மற்றபடி இஸ்ரேலும், அமெரிக்காவும் எப்போதுமே நல்ல நட்பு நாடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகம் என்கின்றனர் சர்வதேச அரசியல் வல்லுநர்கள். ஆனாலும்கூட மத்திய கிழக்கில் இஸ்ரேலை அனைத்து இஸ்லாமிய நாடுகளும் எதிர்த்து வருகின்றனர். அமெரிக்கா, இஸ்ரேலுக்கு பக்கப்பலமாக இருக்கிறது. ஆனால் கத்தாரை மையப்படுத்தி டிரம்ப் போட்டுள்ள இந்த உத்தரவு என்பது அமெரிக்காவால் இஸ்ரேலுக்கு ஆபத்தான ஒன்றாகவே பார்க்கப்படுவதையும் சர்வதேச அரசியல் வல்லுநர்கள் மறக்கவில்லை. இதனால் மத்திய கிழக்கில் போர் சூழல் மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ)



## காசாவுக்கு செல்ல முயன்ற நிவாரண கப்பல்களை சிறைபிடித்தது இஸ்ரேல்

காசாவுக்கு மனிதாபிமான உதவிகளை கொண்டு செல்ல முயன்ற சுமார் 40க்கும் மேற்பட்ட கப்பல்களை இடைமறித்து சிறைபிடித்தது இஸ்ரேல் ராணுவம். கப்பல்களில் இருந்த சமூக ஆர்வலர்கள் கிரேடா துன்பர்க், ரீமா ஹாசன், தியகோ அவிளா உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இஸ்ரேலிய அரசால் தாங்கள் கடத்தப்பட்டுள்ளதாக அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ஐ)



## நியூயார்க் விமான நிலையத்தில் நிறுத்தும் இடத்தில் 2 விமானங்களுக்கு இடையே மோதல்

நியூயார்க் விமான நிலையத்தில் நிறுத்தும் இடத்தில் 2 விமானங்களுக்கு இடையே மோதல் நடந்துள்ளது. டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவன விமானங்கள் இரண்டும் மோதிக் கொண்டதில் ஜன்னல் கண்ணாடிகள் சேதம் அடைந்தன. 2 விமானங்களும் மோதிக் கொண்டதில் ஒரு விமானத்தின் இறக்கைகள் சேதம் அடைந்தது. (ஐ)

## அமெரிக்காவைத் தொடர்ந்து பிரிட்டன் புலம் பெயர்ந்தோருக்கான கட்டுப்பாடுகள் அதிகரிப்பு!




தங்களது நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் உரிமை பெறுவதற்கு, புலம்பெயர்ந்தவர்களுக்கான தகுதி காலத்தை 10 ஆண்டுகளாக உயர்த்தி பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

தற்போது இருக்கும் நடைமுறைகளின்படி, அகதிகளாக வந்து தஞ்சம் அடைந்தவர்கள், 5 ஆண்டுகள் பிரிட்டனில் வாழ்ந்தால், நிரந்தரமாக வசிக்கும் தகுதி பெறுகின்றனர். மேலும், தங்களின் குடும்பத்தினரையும் பிரிட்டனுக்கு அழைத்து வரும் உரிமையும் வழங்கப்பட்டது. இந்த நடைமுறை இனி கிடையாது.

பிரிட்டன் உள்துறை அமைச்சர் ஷபானா மஹ்மூத் புலம்பெயர்ந்தோருக்கான கடுமையான விதிகளை அண்மையில் வெளியிட்டார். அதில், நிரந்தரமாக வசிப்பதற்கு அனுமதி பெறுவதற்கான தகுதிக்காலம் 10 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், குடும்பத்தினரை பிரிட்டனுக்கு அழைத்து வரும் நடைமுறையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பம் செப்டம்பர் மாதத்தில் இருந்தே நிறுத்தப்பட்டு விட்டது.

மேலும் குற்றங்களில் ஈடுபடாமல் இருத்தல், ஆங்கிலம் பேசுதல் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதேவேளையில், அகதிகளாக வருபவர்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்றும், அவர்களுக்கு அடிப்படை பாதுகாப்பு உரிமைகள் வழங்கப்படும் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, அமெரிக்காவில் பிற நாட்டவர்களுக்கான கட்டுப்பாடுகள் தீவிரமாக்கப்பட்ட நிலையில், தற்போது பிரிட்டனிலும் இது கடுமையாக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள குவாசி நீதிமன்றத்துக்கு முன்னால் கடந்த திங்கட்கிழமை மாலை வேளையில் நடைபெற்ற வாகன விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த சம்மாந்துறை சேர்ந்த உதுமாலெப்பை முகம்மட் அன்பர் (வயது 61) என்பவரே இன்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதி உட்பட்ட இருவர் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.அல்-ஜவாஹிர் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 16ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்னும் இரண்டு நாள்களே உள்ளன.

இதற்கான தீர்வை விரைந்து வழங்குமாறு விவசாயிகள் கோருகின்றனர்.

## மூன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று வியாழக்கிழமை காலை ,டம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தைச்சேர்ந்த 65 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் ,ன்று காலை 6.30 மணியளவில் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்

காட்டு யானை தாக்கி மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் ஆனமடு, சியம்பலாகஸ்வெவ பிரதேசத்தைச்சேர்ந்த 65 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் இன்று காலை 6.30 மணியளவில் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கும் போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்

## இசைத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இடம்பெற்ற தேர்தலில் தற்போதைய இசைத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான த.றெபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனடிப்படையில் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு த.றெபேர்ட் அருட்சேகரம் பீடாதிபதியாகச் செயற்படுவார்.

# ரிஷாத்தின் அடிப்படை உரிமைகள் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவு!

*முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், 2021ஆம் ஆண்டு எந்தவொரு நியாயமான காரணமுமின்றி தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை, 2026 மார்ச் 25 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இது குறித்த மனு இன்று (02) நீதிபதிகள் ஷிரான் குணரத்ன, அச்சல வெங்கப்புலி, மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மூவர் அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*இதன்போதே மனுவை அடுத்த ஆண்டு மார்ச் 25ஆம் திகதி அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் உத்தரவிட்டனர்.*

# முல்லைத்தீவு பகுதியில் வெடிபொருட்களுடன் புலிக்கொடி மீட்பு விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார்!

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட காணி ஒன்றில் இருந்து வெடிபொருட்களுடன் புலிக்கொடி மீட்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆ பகுதியிலுள்ள 168ஆம் இலக்க தென்னம் தோட்ட காணியினை உரிமையாளர் துப்பரவு செய்துகொண்டிருந்த வேளையில், காணியில் ஆர்.பி.ஜி ரக குண்டுகள், புலிக்கொடி போன்றவை இருந்துள்ளமையை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பொலிஸ்நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நீதிமன்ற அனுமதியுடன் விஷேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். நகர் பகுதியில் அட்டகாசத்தில் ஈடுபட்ட வன்முறை குழு!

யாழ். நகர் பகுதியில் நேற்று மாலை 5.40 மணியளவில் வன்முறை குழுக்கள் அட்டகாசத்தில் ஈடுபட்டதுடன், தாக்குதல்களும் நடாத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை நடாத்தியவர்கள் யார் என்பது குறித்தோ, தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்ற விடயம் தொடர்பிலோ தகவல் எதுவும் வெளியாகவில்லை.

பொது இடத்தில் இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டதால் மக்கள் அச்சத்தில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்து பொது இடத்தில் அமைதிக்கு குந்தகம் விளைவித்து, மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பெண் குழந்தையை கைவிட்டோரின் பெற்றோருக்கு விளக்கமறியல்!

ஒலுவில் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட பெண் குழந்தையின் பெற்றோரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. குறித்த வழக்கு நேற்றையதினம் (1) அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம், ஒலுவில் பிரதேசத்தில் பிறந்து சில நாட்களேயான பெண் குழந்தை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தந்தை (ஒலுவில்) மற்றும் தாய் (நிந்தவூர்) ஆகியோர் 17 வயதுடையவர்கள் மற்றும் திருமணமாகாத காதல் ஜோடி என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காதல் ஜோடிக்கு பிறந்த குழந்தையை, தந்தையின் உறவினர்கள் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால், கைவிட முடிவு செய்ததாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, குழந்தையின் தாய் வீட்டில் குழந்தையை பிரசவித்தார்.

இதனை அறிந்த தந்தை, குழந்தையை தான் வளர்ப்பதாகக் கூறி பெற்றுக்கொண்டார். பின்னர் அவர் தனது உறவுக்கார பெண்ணை தொடர்பு கொண்டு, ஒலுவில் பகுதியில் கைவிடப்பட்ட குழந்தையை கண்டெடுத்ததாகவும், அதை வளர்க்க முடியுமா எனவும் கேட்டார்.

அந்த உறவுக்கார பெண்ணும் சம்மதித்தார்.

ஆனால் குழந்தையின் தொப்புள்கொடி முறையாக வெட்டப்படாததால் இரத்தம் கசிந்தது.

இதனையடுத்து குழந்தை ஒலுவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது குழந்தை கைவிடப்பட்டதாக கதை பரவியது.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அவர்களை ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

# பிளாஸ்டிக் உபகரணங்களுக்கு SLS சான்றிதழ் கட்டாயம்– அமைச்சர் வசந்த சமரசிங்க!

பாடசாலை மாணவர்கள் மற்றும் குழந்தைகள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் போத்தல்கள், மதிய உணவுப் பெட்டிகள் உள்ளிட்ட பிளாஸ்டிக் உபகரணங்களுக்கு ஞடுஞ சான்றிதழ் கட்டாயமாக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இந்த நடைமுறை 2026 ஏப்ரல் 1 முதல் அமுலுக்கு வரும் என வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த திகதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட தரங்களைப் பூர்த்தி செய்யாத பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முற்றிலும் தடைசெய்யப்படும் என தெரிவித்தார்.

தற்போது குழந்தைகளுக்கு பால் வழங்கப் பயன்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், மாணவர்களின் மதிய உணவுப் பெட்டிகள், மற்றும் தண்ணீர் போத்தல்கள் பல்வேறு விலைகளில் சந்தையில் விற்கப்படுகின்றன.

இவற்றில் சிலவற்றிற்கு தரச் சான்றிதழோ அல்லது பயன்பாட்டிற்கு ஏற்றவை என்பதைக் குறிக்கும் அடையாளமோ இல்லை.

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தகவலின்படி, சில தயாரிப்புகளில் புற்றுநோய்க் காரணிகள் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு, 2026 ஏப்ரல் 1ஆம் திகதி முதல், உணவு மற்றும் திரவங்களைச் சேமிக்கப் பயன்படும் தரமற்ற பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையைத் தடை செய்ய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அன்று முதல், குறித்த பொருட்களுக்கு ஞடுஞ சான்றிதழ் கட்டாயமாக்கப்படும் என அமைச்சர் வசந்த சமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வங்கி யாழ். கிளைக்கு முன்னால் தீப்பந்தப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 02

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக் கிளைக்கு முன்னால் நாளை தீப்பந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தெரிவிக்கையில்,

“அரச வங்கிகளினுள் தற்சமயம் உருவாகியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கத் தொடர்ந்து காலங்கடந்து வருகின்ற நிலைமையில் இலங்கை வங்கி ஊழியர் சங்கம், அரச வங்கிகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு என்ற முறையில் அதற்கு எதிராகத் தற்சமயம் பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகளைச் செயற்படுத்தியுள்ளது.

அதன் இன்னுமோர் கட்டமாக அனைத்து வங்கிகளிலும் (அரச மற்றும் தனியார்) உள்ள அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி மு.ப. 10 மணி முதல் பி.ப. 3 மணி வரை சமூக ஊடக எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொணடிருந்தோம்.

அதன் தொடர்ச்சியாக நாளை மாலை 7 மணியளவில் இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக் கிளைக்கு முன்னால் தீப்பந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்து அரச, தனியார் வங்கி அங்கத்தினர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.” - என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2025 வெளியிடப்பெற்றது.